அள்ளி அள்ளி கொடுங்கோ வெள்ளிப்பணம்
நன்றி சொல்லச் சொல்லி வாழும் உங்களினம் 2
நல்லபடி ஆகும் தந்த பணம்
நீங்கள் நல்கும் சிறு துளியே எங்கள் பலம்

ஈழபோருக்கு உயிரா நாங்கள் கொடுப்போம்
நாளை என்ன விலை எனினும் வெற்றி எடுப்போம்
நாலு பணம் தேவை அள்ளி தரணும்
மீட்போம் நாளை தமிழீழம் நீங்கள் வரணும் 2

குண்டு மழைக்குள்ளும் நாங்கள் நின்று குளித்தோம்
வீடு குலுங்கி இடிகின்ற போதும்  பார்த்து தவித்து
மண்டியிடடு போகவில்லை பகை எதிர்த்தோம்
நாங்கள் மீண்டும் எங்கள் ஊர்களுக்குள் கால்கள் பதித்தோம் 2
இடிந்து போன வாழ்வு மீழவேண்டும்
தமிழிழம் மீண்டும் அழகொழிரவேண்டும்  2

வீடு கடை கோயில் பள்ளி ஒன்றும் மிஞ்சல
ஈழ வீதியெங்கும் குன்றும் குளி எண்ண முடியல 2
நாடுபட்ட காயம் இன்னும் ஐயோ ஆறல
வெளிநாட்டார் வந்து பார்த்த தன்றி ஒன்றும் ஆகல 2
நாட்டை ஆக்க கொஞ்சம் பாரம் தூக்கும்
தமிழ் தெசம் உம்மே அன்றே ஆரைக்கேக்கும்

வானம்பார்த்த குடிசை வாழ்வு இன்றே முடியட்டும்
நாளும் அம்மா பச்சைக்கருசிக்கேங்கும் நிலமை மாறட்டும் 2
மானத்தமிழீழம் சொந்த காலில் நிக்கட்டும்
தமிழா மார்பு தட்டி சொல்லு உலகின் செவியில் கேக்கட்டும் 2
எங்கிருந்தபோதும் எம்மை தாங்கும்
எங்கள் ரத்த உறவு உங்கள் முகம் தோன்றும்

அள்ளி அள்ளி கொடுங்கோ வெள்ளிப்பணம்
நன்றி சொல்லச் சொல்லி வாழும் உங்களினம் 2
நல்லபடி ஆகும் தந்த பணம்
நீங்கள் நல்கும் சிறு துளியே எங்கள் பலம்